அது யார் அழுகையோ அவை ஏன் அழுததோ இந்த நாடு எதிர் கொள்ளும் ஆபத்தின் அறுகுறியே

சின்ன சின்ன விடு கட்டி தின்னையிலே நாம் வளர்ந்தோம் மாமரத்தில் ஊஞ்சல் கட்டி துன்பங்களை நாம் மறந்தோம் ஏன்தொலைந்து போனதுவும் தாய் தேசத்தில் அகதிகளானோம்

அது யார் அழுகையோ அவை ஏன் அழுததோ இந்த நாடு எதிர் கொள்ளும் ஆபத்தின் அறுகுறியே

மண்மானம் காக்க போராடி வீழ்ந்த மாவீரர் கோயிலோ
ஞாபகம் தீமூட்ட சோகம் எனைவாட்ட துடித்தது நெஞ்சல்லவோ
ஆனாலும் உங்கள் தியாகங்கள் இங்கே ஒளி தூவும் வீரரே
மறைந்தாலும் நீ எங்கள் இதையத்தில் வாழ்ந்தீர் தீபம் நான் ஏற்றினேன் மாமா அன்பு மாமா உங்களோடு தீபம் ஏற்ற நாமும் வந்தோம்
மாமா கலங்கவேண்டாம் இறுதிவரைக்கும் நாமும் வருவோம் போரில் அல்ல நன்றி மலர்களே நன்றி தளிர்களே
இந்த போராட்டம் ஜெயித்திடும் காலம் நம் வசமே
அம்புலியை கூட்டி வந்து அம்மா தந்த நிலாசோறு
தும்பியென துள்ளிவந்து கப்பல் விட்டோம் மழைகாலம்
வான் அழுது ஓய்ந்ததுவோ எங்கள் நிலையினை பாத்து 2
கண்ணில் உதிரம் வழிந்ததே இதையம் உருகுதே
இந்த மாமா துணையுண்டு ஓர் நாள் விடிந்திடுமே

இருள் சூழ்ந்த வாழ்வில் கதிர்ராக தோன்றும் கலைவேங்கை அல்லவோ உரிமை நம் மண்ணில் பறிபோனபோது முதல் குரல் உமதல்லவோ ஆசை மாமாவே அருமை மாமாவே சுகமாய் உள்ளீர்களா
றோஜா ப+ப்போல சிரிக்கும் மாமாவே நலமாய் உள்ளீர்களா

எனது தாயகம் அனலிடை வாட நான் மட்டும் நலன் காண்பதேது
உணவு உறக்கங்கள் ஏது 2
நாங்கள் மகிழ்கிறோம் உணர்வை புரிகிறோம் மாமாவின் லட்சியம் ஓர் நாள் மலர்ந்திடுமே

சின்ன சின்ன விடு கட்டி தின்னையிலே நாம் வளர்வோம்
மாமரத்தில் ஊஞ்சல் கட்டி துன்பங்களை நாம் மறப்போம்
மீண்டும் வந்து சேர்ந்திடுமே தேசத்தில் அரசர்களாவோம்
மீண்டும் வந்து சேர்ந்திடுமே தாய் தேசத்தில் அரசர்களாவோம்
நாங்கள் மகிழ்கிறோம் உணர்வை புரிகிறோம் மாமாவின் லட்சியம் ஓர் நாள் மலர்ந்திடுமே